Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.270/2024

Dated 29-01-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண் | வயது | : | 27 |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | டெக்ரேசன் ஒர்க்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 absent 355 BNSS Petition filed and allowed. A2 present.**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) 2) காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது அல்ல.

3) அ.சா.3ஐ எனக்கு தெரியாது.

4)இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர்

வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 7.4.2022 ம்தேதி காலை 11.15 மணியளவில் விளார்ரோடு பான்செக்கார்ஸ் கல்லூரி அருகே பாலச்சந்திரன் டீக்கடையில் நானும் கோபி சுந்தரும் டீ குடித்துக்கொண்டிருந்தோம் என்றும்

2) அப்போது போலிசார் கட்டை ரமேஷ் என்பவரை கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது ரமேஷ் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை போலிசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்துகொண்டார் என்றும்

3)அதன்படி முள்ளிவாய்க்கால் முற்றம் பின்னே உள்ள முந்திரிக்காட்டில் மறைத்து வைத்திருப்பதாக சொல்லி எங்களை அழைத்து சென்று அருவாளையும் கத்தியையும் எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நாங்கள் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்